

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி.முத்துமாணிக்கம் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கேரளத்தில் ஜானகி - எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு முதல்வர் தளபதி தந்த மரியாதையையறிந்த பின்-

# எடப்பாடி பழனிசாமி ஜானகி அம்மையாருக்கு விழா எடுப்பது வேடிக்கை!

## சென்னை கூட்டத்தில் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேச்சு!

சென்னை, டிச.04-

சென்னை, விருகம்பாக்கத்தில் 127வது வட்டத்தில் வட்ட மாமன்ற உறுப்பினர் பொன். லோகு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு தி.மு.க. தலைமை வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேசியபோது கூறியதாவது:-

ஜானகி அம்மா 1996 மே 19-ல் மரணம். இந்த 28 ஆண்டில் ஒருநாள் கூட செப்டம்பர் 23ம் நாள் பிறந்தநாளையோ, மே 19 நினைவு நாளையோ எடப்பாடி பழனிசாமி கொண்டாடியதில்லை. ஜானகி எம்.ஜி.ஆர், அவ்வை சண்முகம் சாலையில் நூறு கோடி ரூபாய் மதிப்பில் உள்ள கட்டிடத்தை தந்தாரே என்பதற்காகவோ, அ.தி.மு.க. ஒன்றுபட இரட்டை இலை நிலைத்திட ஆதரவு கடிதம் தந்ததற்காகவோ ஒரு நாள் கூட நன்றியாக நடந்ததில்லை.

இந்த ஆண்டு கேரளா சென்ற தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் ஜானகி ராமச்சந்திரன் இல்லம் சென்று அந்தம்மையார் படத்துக்கு மாலை அணிவித்து வந்தார். தி.மு.க.விற்கு பிடிக்காத இயக்கத்தின் சார்பில் முதல்வராக இருந்த ஜானகி அம்மையாரின் இல்லத்திற்கு இன்றைய முதல்வர் தங்கத் தளபதி சென்று வந்துவிட்டார். அ.தி.மு.க.வினர் இதுவரை விழா கொண்டாடவும் இல்லை. ஜானகி அம்மா இல்லம் சென்று வணங்கவும் இல்லை என அ.தி.மு.க. தொண்டன் அழுகுரல் கேட்டு, அவர்கள் சமாதானம் செய்திட எடப்பாடி பழனிசாமி ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறார்.

ஜானகி அம்மையார் 1989 தேர்தலில் தமிழக வாழும் கலைஞரைப் போல் ஆட்சி நடத்துவேன் என்று சொன்னாரே அந்த தலைவருக்கு கடற்கரையில் சமாதி வைக்க மறுத்தவர் தான் இந்த எடப்பாடி பழனிசாமி. ஜானகி அம்மையார் ஆன்மா உங்களை மன்னிக்குமா?.

ஜானகி அம்மா வாழும் போதே ஜெயலலிதா பேசும்போது "எம்.ஜி.ஆரை கொன்றதே ஜானகி அம்மையார்தான். அவர்தான் எம்.ஜி.ஆருக்கு மோரில் விஷம் கொடுத்து கொன்றார்" என்றார்.

இப்படி அபாண்டமாக மாபெரும் பழிசுமத்தியதை தனது வாழ்வின் இறுதிநாள் வரை அதை ஜெயலலிதா மறுக்கவே இல்லை. மன்னிப்பு கேட்கவும் இல்லை. ஆனால் எடப்பாடியோ "எம்.ஜி.ஆர். 1967ல் குண்டடிபட்டு படுக்கையில் இருந்தபோதும், 1984ல் உடல் குன்றி அமெரிக்காவிலும். அதன்பின் சென்னையிலிருந்த போதும் உடன் இருந்து காத்தார்" என்று கூறியுள்ளார். இதில் எது உண்மை, தங்களது வார்த்தை உண்மை என்றால், எம்.ஜி.ஆரின் மனைவியையே தவறாக பேசிய ஜெயலலிதா படத்தை இனி புறக்கணிப்பீர்களா?.

கமலஹாசன் விழாவில் எங்கள் உயிரிலும் மேலான கலைஞருடன் ஜானகி அம்மையார் அமர்ந்தார் என்பதற்காக, "அண்ணன் எப்போது சாவான். திண்ணை எப்போது காலியாகும் என காத்திருந்தாயா துரோகி" என்கிறார் "உன்னை பார்த்து இந்த உலகம் சிரிக்கின்றது, உன் செயலைப் பார்த்து உன் நிழலும் வெறுக்கிறது" என அ.தி.மு.க. (ஜெ) தலைமை கழகம் என பட்டக்கணக்கில் போஸ்டர் அடித்த தமிழ்நாடு முழுவதும் ஒட்டினார்கள். அது நியாயமா? அதற்காக ஜெயலலிதாவை நீங்கள் கண்டித்ததாக கணக்கு எடுத்துக் கொள்ளவா?

ஜானகி அம்மையார் மற்றும் எம்.ஜி.ஆர். ஆகியோரின் சிலைகளுக்கு கேரளாவில் எங்களது தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்ததையொட்டி ஜானகி அம்மையாரின் நினைவு வந்து எடப்பாடி பழனிசாமி எப்படியோ ஜானகி அம்மாவிற்கு விழா எடுத்து பெருமைப்படுவதை அ.தி.மு.க. தொண்டனே ரசிக்கவில்லை.

இவ்வாறு கவிஞர் காசி முத்துமாணிக்கம் பேசினார்.

இந்த கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா, க.தனசேகரன், வேளச்சேரி பாஸ்கர், பகுதி செயலாளர்கள் இராஜா, கண்ணன், மா.து. செயலாளர் வாசுகி பாண்டியன், தொகுதி பார்வையாளர் ப. உமா காந்த், பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ். வட்ட செயலாளர் வீ.ர. ராஜா, மு. கோவிந்தராஜன், மைக்கேல். பகுதி பொருளாளர் து. ரஞ்சித் குமார், பொன் சேகர், கோ. வெங்கடேசன், சரவணன், சேட்டு, 3ஜி. சரவணன், பொன். பாஸ்கரன், நல்வேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### வட்டச் செயலாளர் லைனர் கே.பிரபு தலைமையில்

# 119 அ வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாள் விழா!

## நே.சிற்றரசு உணவு வழங்குகிறார்! ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் - ஆர்.என்.துரை பங்கேற்பு!

சென்னை, டிச. 4 -

திருவல்லிக்கேணி பகுதி 119 அ வட்டக் கழகம் சார்பில் எளியோர் எழுச்சி நாளை முன்னிட்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளில் ஏழை எளியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று 4.12.2024 பகல் 11.30 மணிக்கு இராயிட்ஸ் சாலை (வி.எம். தெரு) இராயப்பேட்டையில் வட்ட கழக செயலாளர் லைனர் கே.பிரபு தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதிச்செயலாளர் ஏஆர்பி.எம்.காமராஜ் எம்.சி. மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை ஆகியோர் முன்னிலையில் பொதுக்குழு உறுப்பினர் வே.கமலா செழியன், பகுதி துணைச் செயலாளர் கே. திருநாவுக்கரசு, மாவட்டப் பிரதிநிதி ஏ.பி.வேலு, எஸ். சித்ரா செழியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இந்நிகழச்சியில் வி.பி. பொன்னரசு, மருத்துவர் அ.சுபேர்கான், வி.என். ராஜன், வழக்கறிஞர் பா.பிரகாஷ், ரவிராஜ்குமார், ஏ. விஜயராஜ், இ.இளம்பரிதி, டாக்டர்.எஸ்.ஏ.எஸ்.ஹபீஸ் வுல்லா, எம்.கே.ஆனந்த், பகுதி கழக நிர்வாகிகள் ம.தயாநிதி, சி. தினகரன், எம்.பிரேம்ராஜா, ஆர்.பத்மாவதி, வட்ட கழக செயலாளர்கள் க.வே.மோகன், ஐசிஎப்.எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், என்.ரவி, கே. ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார், மாவட்ட பிரதிநிதிகள் எம்.கலீல்ரகுமான், மா.பச்சையப்பன், ஆர்.சசிகுமார், ஆர்.கஜேந்திரன், எஸ்.சீனிவாசன், எஸ். .விஜயகுமார், ஆர்.ராஜ்குமார், எல்.துளசிராமன், எம்.கமல்நாதன், மங்கை ராஜ்குமார்,

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.கதிரேசன், வி.தினேஷ்குமார், எஸ்.ஏ.ரகுமான்ஷீரீப், ஆர். கணேசமூர்த்தி, எம். மோகன், கே.ஜெகன், ஏ. செல்வம், பி.ராஜ்குமார், எஸ்.தீனதயாளன், எம்.கே. மூர்த்தி, ஏ.ராமன், எச். தஸ்து, எஸ்.ஜெயப்பிரகாஷ், பி.ரஞ்சித், தா.மதன்குமார், ஏ.பாபு, வி.பிரபாகரன், டி. சதீஷ்குமார், கே.சந்தோஷ், கு.குகவேலன்,

எம்.கோபி, டி.கபாலி, புல்லட் எஸ்.பி.கணேசன், இ.முருகன், பி.தேசப்பன், கே.கோபிநாத், கே.ஜலாலுதீன், ஆர்.ராம்குமா,ர் அல்லூர் பி.சீனிவாசன், வி. சாகுல்அமீது, ஆர்.சவிதா, எஸ்.எம்.அப்துல்காதர், எஸ்.ரவீந்திரன், பகுதி அமைப்பாளர்கள் டாக்டர். சீனிவாசன், ஏ.விக்னேஷ்வரன், போட்டோ ராஜா, கே.சரவணன், ஏ. மோகன், டி.எம்.முகமது அலி, ஆர். ரஞ்சித்குமார், எல்.பாலு, எஸ்.விஜயசாரதி, எம்.சுமதி, வி.தேசராணி, எம்.அஷ்வினி, பி.ராஜ்கமல், ஆர். அருண்குமார், எஸ்.சதீஷ்குமார், பி.அருண் குமார் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

### துணை முதல்வர் பிறந்தநாள் விழா! புழல் எம்.நாராயணன் முன்னிலையில்

# புழல் 23வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்குகிறார்! பி.எஸ்.சந்துரு - டி.ராஜாராம் ஏற்பாட்டில்!

சென்னை, டிச.4-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புழல் 23வது வட்டதில்1000 பேருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி பிள்ளையார் கோயில் தெருவில் இன்று (4.12.2024 புதன்கிழமை) மதியம் 12 மணி அளவில் வட்ட செயலாளர் பி.ஸ். சந்துரு மற்றும் துணை செயலாளர் டி. ராஜாராம் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளலர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாரர் புழல் எம். நாராயணன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வட்ட அவை தலைவர் எழில், துணை செயலாளர் வீக்னேஸ்வரன், மேக்கூஷீலா,பிரதிநிதி, க.சிவக்குமார், சைமன், நெல்சன்ராஜ், சரவணன், முத்துவேல், ரவி, பீர், மற்றும் பகுதி கழக நீர்வாகிகள் மாவட்ட கழக நீர்வாகிகள், அணிகளன் அனைத்து அமைப்பாளர்களும் துணை அமைப்பாளாகளும், 23வது வட்ட கழக முனனோடிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. .பாலாஜி, எஸ். சிவக்குமார், டி. திவாகர், கே. சண்முகப்ரியன், எம். என். அஜய் தென்னவன், எம். மைக்கேல், பி. செந்தில், இ. கார்த்திக், சுதர்சன் பூபாலன்விஜய் ஆனந்த், எம்.என். தளபதி, நந்தகுமார், குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# மடை மாற்றிட, அவதூறு அறிக்கை விடலாமா?

மருத்துவர் ராமதாஸ் அவர்கள், முதலமைச்சரை அதானி ரகசியமாக சந்தித்ததாகக் கூறி, அது ஏதோ உலக மகா குற்றம் போல பேசியிருக்கின்றார். ஆனால் ஆறு மாதங்களுக்கு முன்னால் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் வரையிலும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய முற்போக்குக் கூட்டணியின் ஒரு அசைக்க முடியாத அங்கமாகவே இருந்திருக்கிறது, இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது, மருத்துவர் ராமதாஸ் நிறுவனத் தலைவராக இருக்கும் பா.ம.க.!

மோடி தலைமையிலான பா.ஜ.க.வின் கூட்டணியில் அங்கமாக இருந்தால், முதலமைச்சர் அதானியைச் சந்தித்தது பற்றி கேள்வி கேட்கக் கூடாதா? என்று யாரேனும் கேட்பீர்களேயானால் ஆம் என்ற பதிலே நியாயமார்களிடமிருந்து வரும். காரணம், தான் அங்கம் வகிக்கும் கூட்டணியின் அகில இந்திய தலைவராக இருக்கும் மோடி, அதே அதானியின் ஆப்த நண்பராக இருந்து கொண்டு, அவருக்கு பல்வேறு சலுகைகளை வாரி வாரி வழங்கிக் கொண்டிருப்பதை ராமதாஸ் முதலில் கண்டித்து விட்டல்லவா, பிறகு முதலமைச்சரை நோக்கி தனது கேள்விக் கணைகளை வீசியிருக்க வேண்டும்?

மேலும் நம் முதலமைச்சரை அதானி சந்தித்திருந்தால், அதில் என்ன தவறு இருந்துவிடப் போகின்றது?

இந்த திராவிட மாடல் ஆட்சி அமைந்ததிலிருந்தே, முன்னாள் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுடனும், தற்போதைய தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவுடனும் இணைந்து இரண்டு முறை உலக நாடுகளுக்குப் பயணம் செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அங்கெல்லாம் இருக்கின்ற பெரிய பெரிய எம்.என்.சி. எனப்படும் பன்னாட்டு நிறுவன தலைவர்களிடம் பேசிப் பேசி, பலதரப்பட்ட நிறைய தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து சேர்த்துள்ளார்.

அதே அடிப்படையில், இந்தியாவில் மிகப் பெரிய அளவிலும், உலக அளவில் பல்வேறு நாடுகளில் தொழில் செய்யக் கூடிய இந்தியாவை தாயகமாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனங்களின் தலைவர்களான டாடா, அம்பானி, அதானி, பஜாஜ் உள்ளிட்ட பல்வேறு தொழிலதிபர்களிடம் பேசிப்பேசி தமிழ்நாட்டிற்கு பல்வேறு தொழில் முதலீடுகளை ஈர்த்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த ஆகஸ்ட் மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தி, உலகம் முழுவதிலும் இருந்து நூற்றுக்கணக்கான முதலீட்டாளர் களை வரவழைத்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கும், நடத்துவதற்கும் இலகுவாக உள்ள சூழ்நிலைகள் குறித்தும், அள்ள அள்ளக் குறையாமல் இங்கிருக்கும் Man Power எனப்படும் அனைத்து வகையான மனித வளங்கள் பற்றியும், உயர் கட்டமைப்புக் கொண்ட சாலைகள், துறைமுகங்கள், சட்டம் ஒழுங்கு சீராக இருக்கும் அமைதியான சூழல் மற்றும், இந்த திராவிட மாடல் அரசு வழங்குகின்ற அனைத்து வகையான அரசு சம்பந்தப்பட்ட சேவைகள் குறித்தும் விலாவாரியாக அவர்களுக்கு எடுத்துரைத்து,



**சௌமியன் வைத்தியநாதன்**
அமைப்பாளர்
மயிலாடுதுறை மாவட்டக் கழக சுற்றுச் சூழல் அணி

அதன் காரணமாக பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வந்தது அனைவரும் கண்கூடாகக் கண்ட உண்மை நிலவரம்.

அந்த மாநாட்டிலேயே அதானி குழுமம் ரூ.42 ஆயிரம் கோடிக்கும், அம்பானி, டாட்டா போன்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் புதிதாக தொழில் துவங்க சம்மதித்து பல்லாயிரக்கணக்கான முதலீடுகளுக்கான அறிவிப்பை வெளியிட்டு கையெழுத்திட்டன.

ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவரான முகேஷ் அம்பானி, தன்னால் இந்த மாநாட்டிற்கு நேரில் வர இயலாத சூழ்நிலையில், காணொளி காட்சி வாயிலாக வந்து, தமிழ்நாட்டில் தற்பொழுது தொழில் துவங்குவதற்கான சாதகமான சூழ்நிலைகள் குறித்தும், தான் தமிழ்நாட்டில் தொழில் துவங்க மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆவலுடனும் வருவதாகச் சொல்லி தங்கள் நிறுவனத்தின் மூலமாக கிட்டத்தட்ட ரூ.30 ஆயிரம் கோடிக்கும் மேலான புதிய முதலீடுகளை அறிவித்தார்.

காரியங்கள் இப்படி சென்று கொண்டிருக்க, அதானி போன்று மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனத்தின் தலைவர் முதலமைச்சரைச் சந்திப்பதில் என்ன தவறு இருக்கின்றது? அப்படி அவர் முதல்வரைச் சந்தித்து தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டில் குவித்தால், அது தமிழ்நாட்டின் படித்து இளைஞர்களுக்கும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பயன் அளிக்கக் கூடியதுமான சங்கதிகள் தானே?

இதில் மருத்துவர் ராமதாஸ் தமிழ்நாடு முதலமைச்சரை கேள்வி கேட்க என்ன இருக்கின்றது? தவறே இல்லாத ஒன்றை பூடகமாக கேள்வி கேட்பது போல் கேட்டு, ஏதோ தவறு நடந்திருப்பதாக பம்மாத்து காட்டுவதைத் தவிர ராமதாஸ் அவர்களின் கேள்விக்கு வேறு எந்த நோக்கமுமே இல்லை.

கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அதானி குழுமத்திற்கு எல்.ஐ.சி. போன்ற அரசு நிறுவனங்கள் மூலமும், வங்கிகள் மூலமும் நிதியோ, கடனுதவியோ பெற்றுத் தந்ததிலும் அதானி குழுமத்திற்கு ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் நிலக்கரிச் சுரங்கம் எடுத்துக் கொடுக்க, அவரையும் அவருக்கு கடன் கொடுக்கும் SBI வங்கித் தலைவரையும் தன்னுடன் தனி விமானத்தில் அழைத்துச் சென்று உதவி செய்ததிலும்

இலங்கையில் பல்வேறு தடைகளை மீறி அதானி குழுமத்திற்கு மின்சாரத் துறையில் ஒப்பந்தம் ஏற்படுத்தித் தந்ததிலும், இப்படி இன்னும் பல்வேறு வகையான உபகாரங்களை வாரி வாரி வழங்கிய... தங்கள் அணியின் தலைவராக விளங்கக் கூடிய மோடி அவர்களை அல்லவா ராமதாஸ் முதலில் சரமாரியாகக் கேள்வி கேட்டிருக்க வேண்டும்?

அதை விட்டு விட்டு, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், அதானியிடமிருந்து 7ரூபாய் 1 காசுக்கு வாங்கிய ஒரு யூனிட் மின்சாரத்தை தற்பொழுது வெறும் 2 ரூபாய் 60 காசுகளுக்கு வாங்கும் தி.மு.க. ஆட்சியின் திராவிட மாடல் முதலமைச்சரைக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் ராமதாஸுக்கு ஏன் வந்தது?

காரணம், அவர் இனிமேல் தி.மு.க.வோடு கூட்டணி அமைக்கவே முடியாத அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் கூட்டணிக் கதவை பூட்டுப் போட்டு மூடி விட்டார். அந்தக் கோபம் ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம், தாங்கள் அங்கம் வகிக்கும் பா.ஜ.க.வின் மோடிக்கும் அதானிக்கும் இருக்கின்ற முறைகேடான உறவு நிலைகள் பற்றி யாரும் பேசாமல் மடைமாற்றிட. அதானியுடன் முதலமைச்சர் பேசினாரா இல்லையா? சந்தித்தாரா இல்லையா? லப் லப் லப் என்று கேள்விகளை அடுக்கி விட்டு, மோடிக்கு எதிராக நடந்திருக்க வேண்டிய விவாதங்களை இப்படி மடைமாற்றி விட்டு, மோடிக்கு வெண்சாமரம் வீசியிருக்கின்றார் மருத்துவர் ராமதாஸ் அவர்கள்..!

அமெரிக்காவே சொல்லிவிட்டதாம்! அதானி இந்தியாவில் நான்கைந்து மாநிலங்களில் சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் தகடுகள் பொருத்துவதற்காக லஞ்சம் கொடுத்தார் என்று! மருத்துவர் ஐயா அவர்களே, நீங்கள் சொல்லும் அந்த அமெரிக்க அறிக்கை, 2021 2022 காலகட்டத்தில் நடந்த ஒப்பந்தங்களில் தான் அதானி லஞ்சம் கொடுத்ததாகக் கூறுகிறது. ஆனால் நம் தமிழ்நாட்டிலோ அந்த ஒப்பந்தம் போட்டது இந்த ஆண்டுதான். அதாவது 2024ஆம் ஆண்டு தான்!

அதனால்தான் திராவிட மாடல் ஆட்சியின் நாயகரும், மின்சாரத்துறை அமைச்சரும் உங்களின் ஆதாரமில்லாத, அபத்தமான அவதூறு பரப்பும் கேள்விகளுக்கு லெஃப்ட் ஹாண்டில் டீல் செய்துள்ளார்கள். உங்களிடம், இவ்விவகாரத்தில் தவறு நடந்ததற்கான ஏதேனும் ஒரு சிறு ஆதாரம் இருந்தால் கூட நீதிமன்றத்தை நாடியிருக்கலாமே? அதை விடுத்து ஏன் வெறும் அவதூறு அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்?

உங்களுக்கு உண்மையிலேயே தமிழ்நாட்டின் நலனில் அக்கறை இருந்தால், கலைஞர் ஆட்சியில் ஆந்திர எல்லைக்கு அருகாமையில் உள்ள காட்டுப்பள்ளியில் துறைமுகம் மற்றும் கப்பல் கட்டும் நிறுவனம் அமைக்க எல் அண்ட்டியுடன் ஒப்பந்தம் போட்டு, அதை நடைமுறைப்படுத்தி வந்த நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அடுத்ததாக வந்த ஜெயலலிதா அதை அப்படியே அதானிக்கு தாரை வார்க்க முயற்சிக்க, அதை கலைஞர் எதிர்க்கவே, பிறகு வந்த எடப்பாடி ஆட்சியில் காதும் காதும் வைத்தாற் போல, அலேக்காக தூக்கி அதை அதானியிடம் எடப்பாடி தாரை வார்த்தாரே, அந்த அநியாயத்திற்கு எதிராக என்றைக்காவது நீங்கள் அறிக்கை விட்டிருக்கின்றீர்களா?

அ.தி.மு.க.வோடு கூட்டணியில் இருந்ததால், அந்த அநியாயம் உங்களுக்கு நியாயமாக தோன்றியதா என்ன?

அது மட்டுமா? பாரம்பரியமிக்க சென்னை துறை முகத்திற்கு கனரக வாகனங்கள் இலகுவாக வந்து செல்ல கலைஞர் ஆட்சியில் பறக்கும் சாலை அமைத்தாரே! அந்த பறக்கும் சாலையை பாதி நிறைவடைந்த நிலையில், மீதமிருக்கும் தூரத்திற்கு தூண்களையும் கலைஞர் ஆட்சியில் நிறுவிட, அடுத்து வந்த ஜெயலலிதா ஆட்சியில், அந்த மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலை முழுமை அடைந்தால், பெருவாரியான கனரக வாகனங்களில் வரும் சரக்குகள் சென்னை துறைமுகத்திற்கே சென்று விடும். அதனால் அதானியின் காட்டுப்பள்ளி துறைமுகமும், ஆந்திராவில் உள்ள அதானியின் கிருஷ்ணாபட்டிணம் துறை முகமும் சரக்குகள் குறைவாக வந்து நட்டமடையும் என்று கணக்கிட்டு, சென்னை துறைமுகத்திற்குச் செல்லும் அந்த பறக்கும் சாலை திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டார்களே? இதற்கெல்லாம் நீங்கள் ஏதேனும் வினா எழுப்பி, போராட்டம் நடத்தியுள்ளீர்களா மருத்துவர் ராமதாஸ் அவர்களே?

இதோ இன்றைக்கு மீண்டும், அதே பறக்கும் சாலை திட்டத்தை, இந்த திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் அவர்கள் மீண்டும் துவங்கி விட்டார்! இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் அந்தப் பணி மூன்று கட்டங்களாக நடைபெற்று நிறைவடையும்.

இந்தத் திட்டத்தால் பலனடையப்போவது தமிழ்நாட்டின் சென்னை துறைமுகம். பாதிக்கப்படப்போவது அதானியின் துறைமுகம் தான்! இதுகூடப் புரியாதவரா நீங்கள் ஐயா ராமதாஸ் அவர்களே, எங்கள் திராவிட மாடல் முதலமைச்சருக்கு, மோடிக்கு வெண்சாமரம் வீசுவது, அ.தி.மு.க. எடப்பாடிக்கு முட்டுக் கொடுப்பது, இந்த இருவருக்கும் எதிராக பிரச்சினைகள் வெடித்தால் அடை மடைமாற்றம் செய்வது போன்ற வேறு வேலைகள் இல்லை!

அவருக்கு தமிழ்நாட்டு மக்கள் நலனுக்காகவே சிந்தித்து சிந்தித்து செயல்பட வேண்டிய பல்வேறு ஆக்கப்பூர்வமான நல்ல வேலைகள் இருக்கின்றது. அதனால்தான் நீங்கள் சொல்வது போல அவருக்குப் பின்னால் ஒரு ஞான ஒளி வீசுகின்றது!



நீலகிரி மாவட்டம், உதகை தலையாட்டிமந்து நகராட்சி நடுநிலைப்பள்ளி நிவாரண முகாம்களில், தங்கி உள்ள பொதுமக்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (03.12.2024) நேரில் சென்று, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில், நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை நகர மன்றத் தலைவர் திருமதி.வாணிஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் உள்ளனர்.